Registered as a News paper in Sri Lanka விலை ரூபா ஒன்று

முரசு

முரசு 2 6-2-1985 பதன்கிழமை (தை 24-ஐ அன்15) முழக்கம் 2

மூன்று தமிழ் புகையிரத நிலைய அதிகாரிகள் திடீர் இடமாற்றம்

(கொழும்பு)

அனுராதபுரம் ரயில்வே நிலையத்தில் ''கன்ட்ரோல்'' பிரிவில் கடமை யாற்றிய மூன்று சிரேஷ்ட தமிழ் புகையிரத நிலைய அதிகாரிகள் உடனடி யாக அமுல் செய்யப்படும் வகையில் திடீர் இடமாற்றத்துக்குட்டுத்தப் பட்டுள்ளார்கள். திருவாளர்கள் குமாரசாமி, செல்லபா, தர்மவரதர் ஆகிய மூவருமே இவ்வாறு இடமாற்றம் பெற்றுள்ளவர்கள். முதல் இரு வரும் முறையே நாகொல்லகம, மொரகொல்லகம ஆகிய இடங்களுக்கு மாற்றம் பெற்றுள்ளனர். திரு. தர்மவரதர் பிரதான புகையிரத கன்ட் ரோலராவார். இவர்கள் மூவரும் ஒய்வு பெறுவதற்கான பத்திரங்களைச் சமர்ப்பிக்கவுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

அ.தி.மு.க.எம்.பிக்கள் எம்.ஜி.ஆர். இன்று சந்திப்பு முதல்வர் பதவியை எவ்வேளையிலும் ஏற்கலாம்!

(சென்னை)

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் இன்று காலை அ. தி. மு. க. வின் புதிய லோகசபை, சட்ட சபை உறுப்பினர்களைச் சந்திக் கவிருப்பதாகக் கழகப்பொதுச் செயலாளர் திரு ப. உ. சண் முகம் நேற்றுச் சென்னையில் அறிவித்தார்.

முதல்வர் விருப்பப்படி இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை முதல்வருக்குச் சிகிச்சை அளித்ததுடன் அவருடன் நியுயோர்க்கிலிருந்து வந்திருப்பவருமான டாக்டர் சிறி பாதரவ் நேற்று நிருபர்களிடம் பேசுகையில், 'முதல்வர் நல்ல நிலையில் இருக்கிறார். எனினும் இன்னமும் இரு மாதங்கள் அவர் பேணி பாதுகாக்கப்பட வேண்டிய நிலையில் இருக்கிறார். அவருக்கு இவ்விரு மாதங்களும் சரியான கண்காணிப்புத் தேவை'' என்று சொன்னார்.

முதல்வர் உடல் நலத்துடன் தமிழகம் திரும்பியிருப்பது குறித்து திராவிடக் கழகத் தலைவர் கே வீரமணி வாழ்த்துச் செய்தி ஒன்றினை முதல் வருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

''மருத்துவரின் ஆலோசனைக் கேற்ப நடந்து நல்ல உடல் நலத்துடன் தொடர்ந்தும் நீங்கள் மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும்'' என்று அவர் இச் செய்தியில் கூறியுள்ளார்.

'கூட்டணியினருடன் பேச்சில்லை!' தூதுவர் சத்வாலிடம் ஜனதிபதி தெரிவித்தார்!

20-ம் திகதி பாராளுமன்ற ஆரம்ப உரையில் ஜனதிபதி முக்கிய முடிவுகளை அறிவிக்கலாம்

(கொழும்பு)

இலங்கையின் இனப் பிரச்சினை தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுடன் தாம் இனிமேல் தொடர்ந்தும் பேச்சு வார்த்தை நடத்தப் போவதில்லையென்று கடந்த வியாழக்கிழமை தம்மைச் சந்தித்த இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் எஸ். ஜே. எஸ். சத்வாலிடம் ஜனதிபதி ஜெயவர்த்தனே திட்டவட்டமாகத் தெரிவித்ததாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியைச்சந்திப்பது தொடர்பாக புதுடில்லி விடுத்திருந்த அழைப்பு பற்றி பாரதத் தூதுவரும், ஜனதிபதியும் இரண்டாவது தடவையாக கடந்த 31ம் திகதி சந்தித்து பேசியபோது மேற்கண்டவாறு தெரிவித்த ஜனதிபதி, ''இனப் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் சரியான முடிவைக் கூட்டணியுடன் பேச்சுவார்த்தை நடத்தாமலே எடுக்கும்'' என்றும் தெரிவித்ததாகவும் தெரியவந்துள்ளது.

தனிநாட்டுக் கோரிக்கையை கைவிடாதவரை கூட்டணியினருடன் பேச்சுவார்த்தை நடத்தப்போவதில்லை என்று ஜனதிபதி ஜெயவர்த்தனே சில தினங்களுக்கு முன்னர் பொது நிகழ்ச்சியொன்றில் உரையாற்றும் போது தெரிவித்ததும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளையில் இம்மாதம் 20ம் திகதி புதன்கிழமை பாரா

—4ஆம் பக்கம் பார்க்க

மாணவர் குழு கோரிக்கை வென்றது!

யாழ். இந்து, சென். பற்றிக்ஸ் மாணவர்கள் இன்றுவிடுதலை

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் ஜீ சி ஈ. உயர் பரீட்சை எடுக்கவிருக்கும் இரண்டு மாணவர்களையும் பூஸா முகாமிலிருந்து உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு யாழ் பாண மாணவர்களின் பிரதிநிதிகள் குழு விடுத்த வேண்டுகோள் உடனடியாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி மாணவர் குழு தமது வேண்டுகோளை மகஜர் மூலம் யாழ் அரசாங்க அதிபருக்குக் கடந்த வாரம் சமர்ப்பித்திருந்தது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவனான ஆனந்தன் செல்வகுமாரும், (உயரப் புலம், ஆனைக்கோட்டை) யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரி மாணவரான

—4ம் பக்கம் பார்க்க

பூஸாவிலிருந்து சனியன்றும் 50 பேர் விடுதலை

பூஸாவிலிருந்து மேலும் ஐம்பது இளைஞர்கள் எதிவரும் 9ம் திகதி சனிக்கிழமை விடுதலை செய்யப்படவுள்ளனர். நாளை விடுதலையாகும் 52 பேருடன் சேர்த்து இவ்வாரம் மொத்தம் 102 பேர் விடுதலை பெறுகின்றனர்.

ஜனதிபதி-தொண்டமான் இவ்வாரம் சந்திப்பு!

(அகமூம்பு)

அமைச்சர் எஸ். தொண்டமானும், ஜனதிபதி ஜெயவர்த்தனவும் இவ்வார இறுதிக்குள் சந்திக்கவது முக்கியமான விடயங்கள் பற்றப பேசவருகிறார்கள்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கடந்த சனிக்கிழமை எடுத்த சில தீர்மானங்களின அடிப்படையில் பேச்சு வார்த்தைகள் இடம்பெறக் கூடும.

அத்தவேளையில் ஜனதிபதி ஜெயவர்தனவு, அமைச்சர் தொண்டமானுக்குக் கடிதம் ஒன்று அனுப்பியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து 20,000 புதிய வம்சாவளியினர் வெளியேற்றப்பட்டமை, மலையக இளைஞர்கள் கைது செய்யப்

—4ஆம் பகுதி பார்க்க

மூன்று ஆண்களின் சடலம் மட்டுநகர் ஆஸ்பத்திரியில்

(மட்டுநகர்)

மட்டுநகர் ஆஸ்பத்திரியில் அடையாளம் காணப்படாத மூன்று சடலங்கள் வைக்கப்பட்டுள்ளன. இம்மூன்று சடலங்களும் நேற்றுக்காலை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

இருவர் சித்தாண்டியைச் சேர்ந்தவர்களென்றும், ஒருவர் மொறக்கொட்டாஞ்சேனையைச் சேர்ந்தவரென்றும் தெரியவந்துள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளையில் மொறக் கொட்டாஞ்சேனை, கிரான் பகுதிகள் நேற்றுச் சுற்றி வளைக்கப்பட்டபோது சுமார் ஐம்பதுக்கும் மேலானவர்கள் பிடிபட்டதாகவும் தெரியவந்துள்ளது. இவர்கள் தொடர்ந்து விசாரணை செய்யப்படுகின்றனர்.

16, 17, 18 ல் ஊரடங்குச் சட்டம்

17 ம் திகதி அனுஷ்டிக்கப்படும் சிவராத்திரியை முன்னிட்டு 16, 17, 18 ம் திகதி ஆகிய மூன்று தினங்களிலும் ஊரடங்குச் சட்டத்தை நீக்க பாதுகாப்பு அமைச்சு ஆணங்கியுள்ளது. யாழ் அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் விடுத்த வேண்டுகோளின்

— 4ம் பக்கம் பார்க்க

யாழ்ப்பாணத்திலிருந்து உடனடி இடமாற்றம் பெற்ற

இருபது தமிழ் பொலிஸ் அதிகாரிகள் லீவிற்கு விண்ணப்பம் செய்தனர்

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலிருந்து நேற்றுமுதல் உடனடி இடமாற்றம் செய்யப்பட்ட இருபது தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்களும் புதிய இடங்களுக்குச் செல்லாது லீவிற்கு விண்ணப்பித்துள்ளனர்.

சப் இன்ஸ்பெக்டர் திரு முத்துத்தம்பி உட்பட ஐந்து சார்ஜன்டுகளும், பதினொரு பொலிஸ் கான்ஸ்டபிள்களுமே

—4-ம் பக்கம் பார்க்க

ஊரடங்குச் சட்டம் 8 முதல் 4 வரை

யாழ்ப்பாண மாவட்டத்தில் இம்மாதம் 10ம் திகதி முதல் அல்லது 19ம் திகதி முதல் ஊரடங்குச் சட்ட நேரம் இரவு 8 மணி முதல் காலை 4 மணிவரையானதாக மாற்றம் செய்யப்படும். வயல்களில் அறுவடை ஆரம்பமாவதை முன்னிட்டு இம் மாற்றம் செய்யப்படுகின்றது.

பல்லாண்டு வாழ

எம். ஜி. ஆருக்கு கருணாநிதி வாழ்த்து

தமிழக முதல்வர் நலம் பெற்றுத் திரும்பியதுடன் மேலும் பல்லாண்டு சுகமாக வாழவும் விரைவில் முழுமையான

—4ம் பக்கம் பார்க்க

125 கலை, வர்த்தக பட்டதாரி ஆசிரியருக்கு வார இறுதிக்குள் இடமாற்றக் கடிதம்!

(கொழும்பு)

1983 செப்டம்பரில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்து, பின்னர் ஒத்திவைக்கப்பட்ட சுமார் நூற்றி இருபத்தைந்து கலை, வர்த்தக பட்டதாரி ஆசிரியர்களின் இடமாற்றம் இவ்வாரத்திலிருந்து அமுல் படுத்தப்படவுள்ளதாகவும், இதற்கான உத்தரவை கல்விச் சேவை ஆணைக்குழு வழங்கியுள்ளதாகவும் இலங்கைத் தமிழாசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு தி மகாசிவம் நேற்றுத் தெரிவித்தார்.

ஒத்திவைக்கபபட்ட தமிழ் மொழிமூல பட்டதாரிகளின்

—4ம் பக்கம் பார்க்க

நீர்கொழும்பில் பயிற்சி பெற்றுவரும் ஆங்கிலபாட ஆசிரியர்கள் நெருக்கடியில்

(நல்லூர்)

நீர்கொழும்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆங்கில பாட நெறியில் பயிற்சியை மேற்கொள்ள 1984ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டு ஒரு வருடப் பயிற்சியை முடித்துக் கொண்ட வடபகுதியைச் சேர்ந்த ஆசிரிய மாணவர்கள் சமீபத்தில் கொக்கிளாய், நாயாறு போன்ற பகுதிகளில் ஏற்பட்ட கலவரங்களினால் பாதிக்கப்பட்ட நிலையில் அகதிகளான மீனவர்கள் நீர்கொழும்புப் பகுதியில் தங்கியிருப்பதால் அங்கு சென்று தமது பயிற்சியை மேற்கொள்ள முடியாத அவல நிலைமைக்கு வந்துள்ளனர்.

வ பகுதியைச் சேர்ந்த ஆசிரிய பயிற்சியை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பை தன்னால் கொடுக்க முடியாத நிலைமையிலிருப்பதாக ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

பயிற்சியை மேற்கொண்ட ஆசிரியர்கள் தமக்கு ஏற்பட்டிருக்கும் அவல நிலைமையை விளக்கி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுக்குப் பொறுப்பாக இருக்கும் கல்விப் பணி பாளருக்கு விரிவான கடிதமொன்றை எழுதியுள்ளனர்.

வடிகாலில் அசுத்தம்

(குருநகர்)

சென் பற்றிக்ஸ் வீதி சேமக்காலைக்கு ஊடாகச்சென்று கடலில் விழும் பிரதான பெரிய வடிகால கடந்த ஒன்றரை வருடங்களுக்கும் மேலாக சுத்திகரிக்கப் படாமலும், உறைந்து விட்ட மண் தொண்டப் படாமலும் கைவிடப்பட்ட நிலையில் உள்ளது.

இதனால் அயலில் உள்ளவர்கள் குப்பை கூளங்களை வடிகாலிலேயே கொட்டி வருகின்ற நிலைமை நீடிக்கிறது. இந்த வடிகாலைப் புனரமைக்காது விட்டால மழை காலங்களில மழை நீர் ஓடிச செலல முடியாமல சுற்றாடலில் தேங்கி நின்று தொற்றுநோய்க் கிருமிகள் பெருகுப அபாயததால் குடியிருப்பாளர்களுக்கும் பெரும் அச்சுறுததலாகவிளங்கி வருகிறது.

16 பேர் தெரிவு

யாழ். பல்கலைக் கழகத்தில் கல்வி டிப்பிளோமா பரீட்சைக்கான மேற்படிப்பை மேற்கொள்ள 1785-ம் ஆண்டுக்கு 16 பட்டதாரி ஆசிரியர்கள தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

K. G. கல்வி நிலையம்
(இலங்கைவங்கி முன்பாக)
ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்
I. A. A, I. A B.
I. C. M. A.
CHARTERED
ENGLISH Spoken
and Grammar
CITY AND GUILDS
ஆரம்பம் 9-2-85

வரிவிளம்பரம்

நன்றி

அன்னை வேளாங்கன்னியிடமும் உமது அடியானும் நண்பனுமாகிய பியோ விடமும் உருக்கமாக வேண்டுதல் செய்த போது 2 வருடங்களாகமாறாத புண் மாறியதற்கு நன்றியாக இதனை நோத்தியின் படி பிரசுரிக்கின்றேன்.

இப்படிக்கு
உமது அடியாள்

விற்கவும் வாங்கவும்

சகலவித பொருட்களும் விற்கவும் – வாங்கவும் தினமும் வாருங்கள்.

ஏலவிற்பனை நிலையம்
கோப்பாய்

எப்பொருளானாலும் வாங்கவும் விற்கவும் தினமும் வாருங்கள். ஏலவிற்பனை நிலையம் கோப்பாய்.

சேவை

கலர் பிலிம் சுருள்களைச் சிறந்த முறையில் குறுகிய காலத்தில் Processing and Printing செய்து கொள்ள நாடுங்கள் - கொழும்பு ஸ்ரூடியோ யாழ்ப்பாணம்.

இளைஞர் ஆண்டுக்கென பாடசாலை தோறும் குழுக்கள்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு வட்டாரப் பாடசாலைகளில் சர்வதேச இளைஞர் ஆண்டையொட்டிச் சிறப்பு நிகழ்ச்சிகள் பல இடம் பெறவிருக்கின்றன இதற்கான திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்துதற்குப் பாடசாலைகள் தோறும் விசேட குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் சென்ற வியாழக்கிழமை (30-1-85) காலை நடைபெற்ற புங்குடுதீவு வட்டாரப் பாடசாலை அதிபர்களது கூட்டமொன்றிற்குத் தலைமை வகித்துப் பேசிய புங்குடுதீவு வட்டாரக் கல்வியதிகாரி திரு க. குகதாசன் இது தொடர்பான விபரங்களை எடுத்துக் கூறினார்.

பாடசாலைகளில் சர்வதேச இளைஞர் ஆண்டையொட்டி மேற்கொள்ளப்படவிருக்கும் செயற்றிட்டங்கள் குறித்துத் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அவர் பாடசாலை அதிபர்களைக் கேட்டுக் கொண்டார்.

அறுபதாவது ஆண்டு நிறைவு

(உடுப்பிட்டி)

யாழ் மேற்றிராசன அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த வண. பிதா. ஏ குரு சமி, வண. பிதா பீ ஜே. ஜீவரட்ணம் ஆகியோர் தமது குருத்துவ வாழ்வின் அறுபதாவது ஆண்டை நிறைவு செய்தனர்.

இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட வண குரு சமி கண்டி தேசிய குருமடத்தில் விரிவுரையாளராக கடமையாற்றியவர். காவலூரைப் பிறப்பிடமாகக் கொண்ட வண. ஜீவரட்ணம் மன்னார் புனித சவேரியார் கல்லூரி, காவலூர் புனித அந்தோனியார் கல்லூரி, யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றின அதிபராக கடமையாற்றி ஓய்வு பெற்றவராவர்.

நெற்பயிர் நாசம்

(அரியாலை)

கடந்த சில நாட்களாகப் பெய்த மழையினால் அரியாலையில் கால போகவேளாண்மைக்காகச் செய்யப்பட்ட 450 ஏக்கரில் 120 ஏக்கா நெற்பயிர் நாசமடைந்துள்ளது. செம்மணிப் பகுதி வயல்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளது இங்குள்ள பெரிய மதகு ஒன்றைத் திறந்து விடுவதால் ஏற்படும் சிரமம் காரணமாக வயலகளில அதிக நீர் தேங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது இதனால விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளார்கள்.

தலைவர் எச்சரிக்கை

(அரியாலை)

அரியாலை தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களில் சிலர் கள்ளத்தனமாகக் கசிப்பு, சாராயம் காச்சி விற்பனை செய்வதாக அதன் தலைவர் திரு. கே. சிவலிங்கத்திற்குத் தகவல்கள் கிடைத்துள்ளன சம்பந்தப்பட்ட ஊழியர்களின் இச்செய்கை கூட்டுறவுத் துறைக்கு மாசு கற்பிப்பதோடல்லாமல், சங்க ஊழியர்கள் பலர் மேலை இழக்கும் நிலையையும் ஏற்படுத்தும் என்று தலைவர் எச்சரிக்கை செய்துள்ளார். நிருவாகச் சிறப்பு மிக்க சங்கங்களுள் அரியாலைச் சங்கமும் ஒன்று என்பது குறிப்பிடத் தக்கது.

இளைஞர் சிரமதானம்

(மிருசுவில்)

யாழ்–கண்டிவீதியில் எழுதுமட்டுவளுக்கு அண்மையில் கண்ணிவெடிகள் வெடித்ததினால் ஏற்பட்டிருந்த பாரிய குழிகள் இளைஞர் குழுஒன்றினால் நிரவிச் செப்பனிடப்பட்டுள்ளது.

உழவு யந்திரங்கள் சகிதம் நள்ளிரவு நேரம் வந்த சுமார் 35க்கும் மேற்பட்ட இளைஞர்கள், கடந்த 5 வருடங்களுக்கு முன்னர் எழுதுமட்டுவாள் — கிளாலி வீதியைத் திருத்தவென பறிக்கப்பட்டும் இதுவரை பயன்படுத்தப படாமல் இருந்த கற்களைக் கொண்டு இப் பாரிய குழிகளை நிரவிப் போக்குவரத்துக்கு ஏற்றவகையில் செப்பனிட்டுள்ளனர்

அரிசிக்குத் தட்டுப்பாடு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் அரிசிக்குப் பலத்த தட்டுபாடு ஏற்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்திலுள்ள அரிசி ஆலைகளிலும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும் அடிக்கடி இடம் பெறும் கொள்ளைச் சம்பவங்களையடுத்தே அரிசிக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பிரிவுபசாரம்

(மானிப்பாய்)

இணுவில் சைவப்பிரகாச வித்திய சாலையில் கடந்த இருபத்தெட்டு வருடங்களாக உப அதிபராக கல்விப்பணியாற்றிய திரு. என். பொன்னுத்துரை ஓய்வு பெற்றதை முன்னிட்டு மாணவர்களும் ஆசிரியர்களும் பிரிவுபசாரமளித்துக் கௌரவித்தனர்

✻ பாஷையூர், யேசுதாசன் லூசியா தம்பதிகளின் மகள் சுபைதா இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ முரசுமோட்டை, ஸ்ரீஜீவன் இராசயோகம் தம்பதிகளின் மகன் தயரூபன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ சங்கானை தொட்டிலடி, கணேஷ்குமார் தம்பதிகளின் மகள் ஜடீலா இன்று தனது எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

மாணவர் உதவி

(நல்லூர்)

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய உடைகளையும், உணவுப் பொருட்களையும் சேகரிப்பதில் யாழ் பரியோவான் கல்லூரி இன்ரக் கழக அங்கத்தவர்களும், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி லீயோ கழக அங்கத்தவர்களும் ஈடுபட்டுள்ளனர். பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவ, மாணவிகளிடமிருந்து பெருந்தொகையான உடைகள் சேகரிக்கப்பட்டிருப்பதாக இன்ரக் கழகத் தலைவர் செல்வன் இராசநாயகம் தெரிவித்தார்.

வீதிச்சீர்கேடு

(மானிப்பாய்)

மானிப்பாயிலுள்ள வீதிகள் பெரும் சீர் கேடாகக் காணப்படுகின்றன வீதிகளில் பெரும் குழிகள் நிறைந்து காணப்படுவதால் சாரதிகளும் பாதசாரிகளும் பெரும் இன்னலடைகின்றனர். போதாக் குறைக்கு மழைநீரும் இக்குழிகளில் தேங்கிநிற்பதால் பாடசாலை மாணவர்களின் சீருடைகளுக்கு அவ் வழியாற் செல்லும் வாகனங்கள் தாராள அபிஷேகம் செய்து வீட்டுச் செல்வதை காணக்கூடியதாகவுள்ளது.

ஆண்டொன்றில் வாழ்த்து

கவிஞர் தேவதாசன்

வாலிபர்கள் கொலையுற்ற வார்த்தை சொன்னாய்
வவுனியா வாள்வெட்டு வடிவம் தந்தாய்!
காலிமுகாம் கொண்டுசென்ற காளை போரின்
கணக்கெல்லாம் காலையிலே காட்டி நின்றாய்!
தாலியுடன் வீடிழந்து தவித்தோர் தன்னின்
தன்னிழபபை சூடாக தந்தாய்! ஏட்டில்
போலிகளும் உனைக்கண்டு பொடியாய்ப் போனார்
பொங்கியெழு ஆண்டொன்றில் ஈழமுரசே.

பாரதத்தாய் இறந்ததையும் பார்த்தோம் உன்னால்
படவுலகின் வேந்தனும் எம்ஜி ஆரின்
போரதுவாம் வரத்தமதை பொன்னாய் காட்டி
பொதுமக்கள் பலருடைய போற்றல் பெற்றாய்
வீரமுடன் சிறைபுகுந்து விடுவித் தோரின்
விபரங்கள் பலதையுமே விதமாய்த் தந்தாய்!
ஊரெல்லாம் வசிக்கின்ற உழைப்போர் வர்க்கம்
உளம்மகிழ்ந்து வாழ்த்துகின்றார் ஈழமுரசை!

பிறந்த நாள் வாழ்த்து

✻ பூநகரி, சின்னத்துரை கனகமணி தம்பதிகளின் மகள் கௌசல்யா இன்று தனது பதினோராவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ வல்வெட்டி, அப்பாத்துரை மல்லிகா தம்பதிகளின் மகள் அனுஷியா இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

சதுரங்க பயிற்சி

(அரியாலை)

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தில் சதுரங்க விளையாட்டுப் பயிற்சி (செஸ்) வை. எம். ஏ. உறுப்பினர் திரு. வி மே அருளானந்தம் அவர்களால் அளிக்கப்பட்டு வருகிறது இதில் பலர் கலந்து கொண்டு பயிற்சி பெற்று வருகிறார்கள்.

புலமைப்பரிசில

(நல்லூர்)

இலங்கை அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு அத்தியட்சாதீனத்தினால் வழங்கப்படும் புலமைப்பரிசிலை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வர்த்தகப்பட்டப் படிப்பை மேற்கொள்ளத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் செல்வன் எஸ் சுரேந்திரபாலன் பெற்றிருக்கிறார்.

சுண்டிக்குளி பரியோவான் ஆலயததைச் சேர்ந்த இவர் யாழ் பரியோவான் கல்லூரியின் பழைய மாணவராவார். இவர் மக்கள் விற்பனவுத் திணைக்களத்தில் பணியாற்றிய திரு. செல்லக்கண்டுவின் புதல்வராவார்.

ஒரு வாசகரின் வேண்டுதல்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையில் கட்டுப்பாட்டாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு. வி. ஏ சிவஞானம் "ஈழமுரசிற்கு" எழுதிய கடிதத்தின் ஒருபகுதி:

"ஒரு தாழ்மையான வேண்டுகோள் ஈழமுரசை ரூபா ஒன்றிற்கு விற்பனை செய்வது நியாயமானதா? எங்களுக்கு இலாபம் ஆனால் உங்களுக்கு...? அண்மையில தமிழ்நாட்டுப் பத்திரிகை ஒன்றில் வெளியான கேள்வி – பதில் பகுதியை உங்களுககுத் தெரிந்திருந்தாலும் இங்கு எழுத விரும்புகின்றேன்.

கேள்வி :- ஓஸியில் பத்திரிகை படிப்பது தவறா?

விடை:- எழுதுபவனின் உழைப்புக்கு ஒரு நியாயமான விலையுண்டு. அச்சிடும் காகிதத்திற்கும் ஒரு விலையுண்டு, பதிசகும் 'மைக்'கும் காசுதான் இயந்திரத்திற்கும் காசுதான்.

இத்தனை செலவுகளைத் தாங்கிவரும் ஈழமுரசு பத்திரிகையின விலை ரூபா ஒன்று என்றால் இது எத்தனை பேரினுடைய உழைப்பைச் சுரண்டுவதாகும்? விலையைக் சிறிது கூட்டலாமே.

ஆனந்தா
கல்வி நிலையம்
கே. கே. எஸ். வீதி
சுன்னாம்
G C. E O/L. A/L
தட்டெழுத்து / சுருக்
செழுத்து (ஆங்கிலம்)
ஆங்கிலம் ENGLISH
SPOKEN AND
GRAMMAR,
CITY AND GUILDS
பகல் நேர/மாலைநேர
வகுப்புகள்.
ஆரம்பம் 10 2-85.

உதய சிந்தனை

அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல். ஆலயம் பதினாயிரம் நாட்டல் அன்னயாவினும் புண்ணியம் கோடி, ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்.
—பாரதியார்.

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி : 23336

இதய ஒலி

6-2-85 புதன்கிழமை (இரத்தாக்ஷி தை 24)

பூண்டோடு அழிக்க ஒன்று திரளுங்கள்!

தமிழர் அதிகமாக வாழும் பிரதேசங்களில், குறிப்பாக வடபகுதியில் வேகமாக முன்னேறி வரும் 'குடிசைத் தொழில்' ஒன்று பற்றி இப்போது அடிக்கடி செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

பொதுவாக குடிசைத்தொழில் என்றால் அது ஒரு கிராமத்தைச் சேர்ந்த பலமக்களும் பங்குபற்றும் தொழிலாகவும், பலருக்கும் வருவாயைப் பெற்றுக் கொடுக்கும் தொழிலாகவும் அமைவது வழக்கம்.

ஆனால் இங்கு நாம் குறிப்பிடும் தொழில் அப்படியான தல்ல களவாக, இரகசியமாக, மறைவிடங்களில் நடைபெறும் ஒருதொழில் இது. அயலவர்களுக்குப் பயந்து சட்டவிரோதமாகச் செயற்படும் 'தொழிற்சாலை' யாக இது பல கிராமங்களிலும் இயங்கி வருகிறது.

மேலும் குறிப்பிட்டுச் சொல்வதானால் மனித உயிர்களைக் கொல்லும் ஒருதொழில் என்று இதனைச் சொல்லலாம்.

"கசிப்பு தயாரிக்கப்படும்" தொழிலையே இங்கு நாம் குறிப்பிடுகின்றோம். "வெட்டிரும்பு, வைரவன், காளி" என்று பல பட்டப்பெயர்கள் இதற்குண்டு என்பதை எமது நிருபர்கள் எமக்கு அனுப்பும் செய்திகள் மூலம் அறியக்கூடியதாக இருக்கின்றது.

கசிப்புத் தயாரிப்பில் ஈடுபட்ட பலர் மொட்டை அடிக்கப்பட்டு வீதிகளில் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டு மக்கள் முன்னால் அவமானப் படுத்தப்பட்ட பல சம்பவங்களும் ஏற்கனவே நடைபெற்றிருக்கின்றன.

கசிப்பு வடிக்கும் குடிசைகளை சில இளைஞர் இயக்கங்கள் முற்றுகையிட்டு, பாத்திரங்களை அடித்து நொருக்கி, தீமூட்டிய சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

ஆனாலும் கசிப்பு உற்பத்தி குறைவதாக இல்லை.

உரும்பராயிலிருந்து ஒரு குடும்பப் பெண்ணும், மட்டுவிலிலிருந்து இரண்டு பிள்ளைகளும் எமக்கு எழுதியிருக்கும் நெஞ்சைத்தொடும் கடிதங்கள், அவர்கள் வீட்டுத் தலைவர்கள் கசிப்புக்கு அடிமையானதால், அந்தக்குடும்பங்கள் அன்றாடம் அனுபவித்து வரும் இன்னல்களை எமக்குப் புரியவைக்கின்றன.

சிலர் கசிப்புத் தயாரிக்கப்படும் இடங்களின் விபரங்களைப் படங்களாக்கி எமக்கு அனுப்பியுள்ளனர். இந்தக் குடிசைகளைக் கண்டுபிடித்து அழிக்குமாறும் எம்மிடம் மன்றாடியுள்ளனர்.

இவைகளைச் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்துக்கே விட்டு விடுகிறோம்.

கசிப்பு அருந்துபவர்களுக்கு ஆயுள் அற்பமாகி விடுமாம் எனவே இது ஒரு சமூக விரோதச் செயல் என்று சுட்டிக் காட்டவேண்டிய தேவையில்லை.

கசிப்பு அருந்துபவர்கள் ஆகக்கூடியது ஆறு மாதம் தான் உயிர்வாழ முடியுமென்பதும். சிலர் மூன்று மாதங்களிலேயே உயிரை மாய்த்து விடுவார்களென்பதும் பொதுவான நம்பக்கூடிய அபிப்பிராயமாகும்.

கிராம ரீதியாக கசிப்புத் தயாரிப்பவர்களின் இவ்விபரங்களைக் கொண்ட பட்டியலொன்றை வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கொண்டிருப்பதாக ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

இவ்வாறான சங்கமொன்றின் உறுப்பினர்கள்கூட கசிப்புத் தயாரிப்பில் ஈடுபட்டிருப்பதாக மற்றொரு செய்தி தெரிவிக்கின்றது.

இது உண்மையானால், "உள் வீட்டைச் சுத்தம் செய்யும்" வேலையை சங்கம் முதலில் கவனிக்க வேண்டும் என்பது எமது விருப்பம்.

தமிழ்ப்பகுதிகளில் "அகால மரணங்கள்" அன்றாடம் நடைபெறுகின்றன. இதனால் அழிக்கப்படும் உயிர்கள் போதாதென்று, கசிப்பும் சேர்ந்து மேலும் பல உயிர்களை ஒழிப்பதை இன்றைய காலகட்டத்தில் அனுமதிக்கக்கூடாது.

எனவே தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் தலைமையில் அனைத்துச் சக்திகளும் ஒன்றுதிரண்டு கசிப்பு என்னும் கொடிய அரக்கனைப் பூண்டோடு அழிக்க முன்வர வேண்டும்.

நிர்வாகத்தில் தூய்மை: சட்டம் ஒழுங்கு முக்கியம்

மாநில செயலர் மாநாட்டில் ராஜீவ்

(புதுடில்லி)

"நிர்வாகத்துறையில் தூய்மை நிலைபெற ஆக்கபூர்வ சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டியது அவசியமாகும் அரசியல் தறுக்கீடின்றி இயன்ற யாவற்றையும் இந்த வகையில் செய்ய வேண்டும். சட்டம், ஒழுங்கு நிலைநாட்டப்படல் இதன் அடிப்படைத் தேவையாகும். அதிக எதிர்பார்ப்புகளுக்கு மக்கள் உந்தப்பட்டுள்ளனர் அவர்களது அபிலாஷைகள் நிறைவேற்றப்படவேண்டியது அரசின் தலையாய கடமையாகும். என்று பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி நேற்றுப் புதுடில்லியில் நடைபெற்ற மாநிலங்கள் — யூனியன் பிரதேசங்களின் தலைமைச் செயலாளர்கள் கலந்து கொண்ட மாநாட்டில் முக்கியத்துவ உரை நிகழ்த்துகையில் தெரிவித்தார்.

உள்துறைமந்திரி திரு எஸ். பி சவானும் கலந்து கொண்ட இம்மாநாட்டில் பிரதமர் தொடர்ந்து பேசுகையில் "நிர்வாகப் பணிகள் விரைவுறவேண்டும் நிர்வாகத்தில் நட்பு மேல்மட்டத்திலிருந்து தான் கீழ் மட்டத்திற்கும் பரவவேண்டும். நட்பு நிலை இன்றியமையாத அம்சமாகும். பொருளாதார வளர்ச்சிதான் மிக. மிக அவசியம் என்பதை உணர்ந்து செயற்படவேண்டும்" என்றார்.

திரு. ராஜீவ் காந்தி பிரதமராகப் பதவியேற்றபின் மாநில—யூனியன் பிரதேசச் செயலாளர்களுடன் கூடிய மாநாடு நடத்தியது இதுவே முதல்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க உதவி பாகிஸ்தான் முன்னணி

(வாஷிங்டன்)

அமெரிக்காவிடமிருந்து அதிகரித்த அளவில் உதவிபெறும் ஆசிய நாடாக பாகிஸ்தான் விளங்குகிறது என்று நேற்று உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டது.

பாரதத்தில மாலை தீவு ஜனாதிபதி

(புதுடில்லி)

மாலைதீவு ஜனாதிபதி அப்துல்கையும் மூன்றுநாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு பாரதம் வந்துள்ளார், புதுடில்லியில் அவரை வெளிவிவகார இணையமைச்சர் குர்ஷித் ஆலம்கான வரவேற்றார்.

பிரதமர் திரு. ராஜீவ் காந்தியை மாலைதீவு ஜனாதிபதி சந்திக்கையில, இருநாடுகளுக்கும் இடையிலான நட்புறவு பயனுள்ளவகையில் மேலும்வலுப்பெறும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில பல்வேறு விடயங்களை குறித்தும் பேசுவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

பொருளாதார சமூக ஒத்துழைப்புக்குறித்தும் இவ்வேளை ஆராயப்படும். மாலைதீவுஜனாதிபதி பாரத ஜனாதிபதி திரு. ஜெயில்சிங்கையும் சந்திக்கவுள்ளார்.

'வியட்னாமியவிஜயம் வெற்றி தரவில்லை' ஐ.நா. செயலாளர்

(சிங்கப்பூர்)

தமது வியட்னாம் விஜயம் சிறப்பான பலன் தரவில்லை என்று ஐ நா பொதுச் செயலாளர் திரு. குவெல்லர் தனது வியட்னாமிய விஜயத்தின் பின் சிங்கப்பூரில் சற்று நேரம் தரித்து நிற்கையில் சொன்னார்.

எனினும் தமது சமாதான முயற்சி தொடரும் என்று சொன்ன அவர் கம்பூச்சியப் பிரச்சினையில் நல்ல தீர்வு காண தான் சகல வழிகளிலும் முயற்சிகள் மேற்கொள்ளப் போவதாகவும் கூறினார்.

வெற்றி விருது ரஷ்யாவுக்கு

(மாஸ்கோ)

ஜவகர்லால் நேரு சர்வதேச விருதுக்கான கால்பந்துப் போட்டியில் யூகோஸ்லேவேகியாவை வென்று சோவியத் யூனியன் விருதைச் சுவீகரித்துக் கொண்டது.

மாஸ்கோ வர்த்தகர் மாய மறைவு

(மாஸ்கோ)

பிலிப்பைன்ஸ் தலைநகராக மணிலாவில் நடைபெற்ற சோவியத் கண்காட்சியில் கலந்து கொள்ள வந்திருந்த குழுவில் இடம்பெற்றிருந்த கிவானோவிஷ் என்ற பிரபல வர்த்தகர் மர்மமாக மறைந்து விட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

மாஸ்கோ அதிகாரிகள் இச்சம்பவம் குறித்து கவலை தெரிவித்துள்ளனர்.

எம். ஜி. ஆர். முழுமை நலம் பெற மீண்டும் பூஜை, பிராரத்தனை

(சென்னை)

நியுயோர்க்கில் சிகிச்சை பெற்று சென்னை திரும்பியுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி இராமச்சந்திரன் விரைவில் பூரண நலம் பெற வேண்டுமென நேற்றுத் தமிழகத்தில் பரந்த அளவில் பல கோவில்களில் விசேட பூஜைகளும் பிரார்த்தனைகளும் நடைபெற்றன.

ஆந்திர முதலமைச்சர் திரு. என். டி ராமராவ் திரு எம். ஜி. ஆர் விரைந்து முழுமையான குணம் பெற வேண்டி அவருக்கு வாழ்த்துத் தந்தி ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

இந்திய - ரஷ்ய வர்த்தக உறவு

(மாஸ்கோ)

சோவியத் யூனியனுக்கும் பாரதத்துக்கும் இடையேயான வர்த்தகப் பொருளாதார உறவுகள் மேலும் வலுப்பெற்று வருகின்றன. முந்நூற்று எண்பதாயிரம் கோடி ரூபா வரை இத்தொடர்புகள் உயர்வடைந்துள்ளன என்று மாஸ்கோ அறிக்கைகள் நேற்றுத் தெரிவித்தன.

பாரத-சோவியத் நட்புறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் சோவியத் யூனியனுக்கான பாரத தூதுவரும் கலந்து கொண்டார்.

வர்த்தகப் பொருளாதாரத் துறையிலான மேற்படி பணத் தொகை முன்னரைக் காட்டிலும் மிக அதிகரித்த ஒன்று என்றும் தெரிவிக்கப்பட்டது.

பிரான்ஸ், போலந்து, கி. ஜெர்மனியும்

இந்திய உளவு விடயத்தில் சம்பந்தமென வாக்கு மூலம்

(புதுடில்லி)

இந்திய உளவு விவகாரத்தில் கைதான பிரதான சந்தேக நபர் குமார் நாராயண் நீதிபதி ஒருவருக்கு அளித்துள்ள அந்தரங்க வாக்கு மூலத்தில் இவ்விவகாரத்தில பிரான்ஸ், போலந்து, கிழக்கு ஜெர்மனி ராஜசந்திரிகளும் தொடர்பு கொண்டிருந்ததாகக் கூறியுள்ளார்.

மேற்படித் தூதரக வட்டாரங்கள் இதுபற்றி எவ்வித கருத்தும் வெளியிடவில்லை.

பிரிட்டனில் இந்திய ராஜ்ய

பிரதிநிதிகொலை; இருவர்மீது குற்றச்சாட்டுத் தாக்கல்

(லண்டன்)

பிரிட்டனில் பாரத ராஜ்யப் பிரதிநிதி ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக இருவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இவர்கள்மீது கொலைக் குற்றம் சுமத்துவது தொடர்பாக நடைபெற்ற பதினாறு நாள் விசாரணையில் பதினொரு நீதிபதிகள் குற்றச்சாட்டுக்கு ஆதரவாகவும் ஒருவர் எதிர்த்தும் தீர்ப்பளித்தனர்.

எதிரிகள் தாம் நிரபராதிகள் எனத் தெரிவித்தனர் பிரிட்டனுக்கான பாரதத் துணைக்கமிஷனர் மகத்ரே அலுவலகத்திலிருந்து கடந்த வருடம் பெப்ரவரி மாதம் வீடு திரும்புகையில் மர்மமாகக் காணாமல் போயிருந்தார். இரு நாட்களின்பின் அவர் கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

3000 வேட்பு மனுத்தாக்கல்

(புதுடில்லி)

பதினொரு சட்ட சபைகளுக்கும், பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்துக்கும் நடைபெறவுள்ள தேர்தல்களுக்கு நேற்று வரை மூவாயிரசத்துக்கும் அதிகமான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

பாண்டிச்சேரியில் முப்பது சட்டசபைத் தொகுதிகள் உள்ளன. நேற்று வரை ஆறு வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

ஈழமுரசு

ராமேஸ்வரம் மீனவர்கள் கடத்தப்பட்டு விட்டதாக புகார்!

(ராமேஸ்வரம்)

ராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் பதினைந்து பர் இலங்கைக் கடற்படையினரால் கடத்திச் செல்லப்பட்டு விட்டனர் என்று ராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவர் திரு. பெர்ணாண்டோ நேற்றுத் தெரிவித்தார். இம் மீனவர்கள் மூன்று படகுகளில் கடலுக்குச் சென்றிருந்தனராம். இருபடகுகள் பற்றிய விடயம் புரியாத புதிராக இருப்பதாகவும் அவர் மேலும் சொன்னார். இதேவேளை கடந்த முதலாம் திகதி தஞ்சாவூர் பகுதியிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற ஐந்து மீனவர்கள் இன்னமும் தத்தம் இருப்பிடம் வந்து சேரவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

பூஸாவிலிருந்து விடுதலை பெற்று நாளை யாழ்நகர் வரவிருக்கும் 52 இளைஞர்கள்

பூஸா இராணுவ முகாமிலிருந்து இன்று விடுதலையாகும் 52 இளைஞர்கள் நாளை யாழ்ப்பாணம் வருவர்.

அனுரதபுரம் வரை யாழ் தேவி மூலம் கொண்டு வரப்படும் இவர்களை, அங்கிருந்து விசேஷ பஸ் மூலம் யாழ்ப்பாணம் கொண்டுவர ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

விடுதலை பெறும் 52 பேரின் பெயர் விபரங்கள் வருமாறு:

ஜேக்கப் அன்ரனி பண்டத்தரிப்பு, மகாதேவன் ஆரியபாலன் கொலங்கலட்டி, ஐயாத்துரை அருள செல்வம் சங்கானை, அல்போன்ஸஸ் அல்பேட் ரகுநாதன் பண்டத்தரிப்பு, முத்துலிங்கம் அருளானந்தன் ஆனைக்கோட்டை, கிருஷ்ணர் இந்திரராஜா சுழிபுரம், அருளானந்தன் வில்வ ராஜசிங்கம் சில்லாலை, தம்பித்துரை கிருபாகரன் ஆனைக்கோட்டை, முருகேசு மகேந்திரன் சித்தங்கேணி, பொன்னம்பலம் முருகதாஸ் தெல்லிப்பளை, சின்னத்துரை நவரஞ்சன் தெல்லிப்பளை, வேலாயுதபிள்ளை பத்மநாதன் கொக்குவில், மாணிக்கம் புஷ்பராஜா கைதடி, சிவராஜா பேரம்பலம் பண்டத்தரிப்பு, இராசையா பரமேஸ்வரன் தாவடி, கந்தசாமி ராஜசிங்கம் கைதடி, வேலாயுதன் ரவீந்திரன் சுழிபுரம், கந்தசாமி ரவீந்திரன் சங்கானை செல்வரத்தினம் ரவீந்திரன் பண்டத்தரிப்பு, சின்னையா இராசநாயகம் ஆனைக்கோட்டை, ஆனந்தன் செல்வகுமார் ஆனைக்கோட்டை, ராஜா ஸ்ரீதரன் தெல்லிப்பளை, செல்வத்துரை சிவராசா மாதகல், சிற்றம்பலம் செல்வராசா சுழிபுரம், முத்துலிங்கம் சிவானந்தன் ஆனைக்கோட்டை இராசப்பா தயாபரன் நவீன சந்தை யாழ்ப்பாணம், கந்தையா தேவேந்திரன் நயினாதீவு, சீனித்தம்பி விபுலானந்தராசா பொன்னாலை, மோசஸ் பிரான்சிஸ் சேவியர் யாழ்ப்பாணம், திரவியம் சந்திரன் பலாலி, அருணாசலம் முத்துலிங்கசாமி மிருசுவில், நாதன் இராசேந்திரன் தொண்டமானாறு, நாகராஜா பாஸ்கரன், செல்லப்பன் பாலகிருஷ்ணன், வீனன்தம்பி பாஸ்கரன், மேர்சிலினோ, ஞானபிரகாசன் ரவீந்திரன், காசிலிங்கம் ரவிந்திரன், சின்னையா ராமகிருஷ்ணன், முருகையா இரத்தினேஸ்வரன், பொன்னுத்துரை ஸ்ரீகாந்தன், சின்னராசா சிதம்பரநாதன், கந்தையா ஸ்ரீபந்தாகரன், கருணாலிங்கம் ஸ்ரீஸ் கந்தகுமார் கந்தசாமி சுரேந்திரன், எதிரிநாயகம் செல்வநாயகம், இராசதுரை சரவணதன், சூடாமணி விக்னசிவராசன், கைலாப்பிள்ளை விவேகானந்தன், கதிர்காமசேகரன் இந்திரகுமாரன், ஆறுமுகம் வெங்கடசாமி, இராமு யோகநாதன்.

கூட்டணியுடன் . . .

—1ம் பக்கத் தொடர்

ளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை ஜனாதிபதி ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போது இனப்பிரச்சினைக்கான சில முக்கிய தீர்வுகளை அவர் பகிரங்கப் படுத்தல் மெனவும் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

எம். ஜி. ஆருக்கு . . .

—1ஆம் பக்கத் தொடர்

பேசும் ஆற்றலைப் பெறவும் தி. மு. க. தலைவர் மு கருணாநிதி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

எம். ஜி ஆருக்கு அவர் அனுப்பியுள்ள கடிதமொன்றில் கருத்துவேறுபாடுகளின் மத்தியிலும் நட்புணர்வோடு தான் அவரை வாழ்த்துவதாகவும் எம். ஜி ஆருக்கு வசதிப்பட்டால் நேரில் சந்தித்து வாழ்த்த விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

16, 17, 18 இல் . . .

— 1-ம் பக்கத் தொடர்

பேரில் அமைச்சு இணக்கம் தெரிவித்தது. இம்மூன்று தினங்களிலும் ஊரடங்கு நீக்கப்படலாம் என்று 'ஈழமுரசு' நேற்றே அறிவித்திருந்தது.

அந்தியேட்டி

கதிரவேல்
சுந்தானந்தன் (சேகர்)
அழிப்பு . 12-12-84

கதிரவேல்
சண்முகானந்தன்
(அழிப்பு : 10-1-85)

6-1-85 இல் அவர்களது இல்லத்தில் நடைபெறும் மேற்படி சகோதரர்களது அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ள அழைக்கின்றோம்.

குப்பிழான் சி கதிரவேல்
குடும்பத்தினர்

இருபது தமிழ் . . . .

—1ம் பக்கத் தொடர்

நேற்றுமுதல் இடமாற்ற உத்தரவைப் பெற்றவர்கள். சப் இன்ஸ்பெக்டர் காலிக்கும், மற்றைய பத்தொன்பது பேரும் கொழும்பு மாவட்டத்துக்கும் இடமாற்றம் பெற்றனர்.

இவர்களில் அனேகமானவர்கள் இருபத்தைந்து வருடங்களுக்கு மேல் சேவையாற்றியவர்கள் என்றும், உயர் வகுப்புகளில் படிக்கும் பிள்ளைகளையும், குடும்பங்களையும் விட்டுப் பிரிந்து செல்லமுடியாத நிலையிலிருப்பவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

தமது இடமாற்றங்களை ரத்துச் செய்யுமாறு பொலிஸ்மா அதிபரிடம் விண்ணப்பித்துள்ள இவர்களில் பலரும் இடமாற்றம் ரத்தாகாதுவிடின் சேவையிலிருந்து ஓய்வு பெறலாமெனவும் தெரிய வந்துள்ளது.

125 கலை, வர்த்..,

—1ம் பக்கத் தொடர்

இவ்விடமாற்றங்களை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு தமிழாசிரியர் சங்கத் தலைவர் திரு. டி.எஸ்.கே. வனசிங்கா செயலாளர் திரு. த. மகாசிவம் ஆகியோர் கடந்த வாரம் கல்விச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் திரு. கே. ஜெயக்குமாரையும் செயலாளர் திரு. ஆரியரத்தினாவையும் சந்தித்து வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து நிறுத்தப்பட்டிருந்த இடமாற்றத்தை உடன அமுல்படுத்துமாறு கல்விச்சேவை ஆணைக்குழு யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்துள்ளது. 1983 செப்டம்பரில் அனுப்பப்பட்ட பட்டியலில் 173 பேரின் பெயர்கள் இருந்தன இதில் சில 1983 ஜூலைக் கலவரத்தால் பாதிக்கப்பட்டு 1984 ஆகஸ்டிற்குப் பின்னர் இடமாற்றம் பெற்று விட்டதால் மிகுதியாக விருக்கும் சுமார் 125 பேர் இவ்வாரத்தில் தமது இடமாற்றக் கடிதங்களை யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து பெறுவர்.

ஒரு தேரோ கேட்கிறார்

தீவிரவாதிகளின் பணியை ஸ்ரீமாவோ ஏற்றுள்ளாரா?

(மாத்தறை)

வெளி நாடுகளில் இலங்கை அரசை களங்கப் படுத்திக் காட்டும் தமிழ் தீவிரவாதிகளின் பணியை இப்போது திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பொறுப்பேற்றிருக்கிறார். அவரது அண்மைப் பேச்சு இதனையே காட்டுகிறது என வண. வெல்டொட்ட பணாதாசி மகா தேரோ குறிப்பிட்டார்.

திகாகொட மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற வைபவமொன்றில் உரையாற்றிய மகா தேரோ, அப்பாவித் தமிழர்களை ஆயுதப் படையினர் கொல்கின்றனர் என்ற ஸ்ரீமாவோவின் கூற்று குறித்தே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இலங்கையின் ஆயுதப் படைகளைக் குறை கூறுமாறு அவர் வெளி நாட்டுச் சக்திகளால் தூண்டப் பட்டுள்ளாரா என வினாவியதுடன் நமது நாட்டின் முன்னேற்றத்தைக் குலைக்க தொழிற்படும் வெளி நாட்டு சக்திகளின் வலையில் ஸ்ரீமாவோ விழுந்து விட்டார் என்றும் குற்றஞ் சாட்டினார்.

ஸ்ரீமாவோவின் யாழ் மாவட்டத் தலைவராகவிருந்த அல்பிரட் துரையப்பாவைத் தீவிரவாதிகளே கொன்றனரென்பதைச் ஸ்ரீமாவோ மறந்திருக்க மாட்டார் எனச் சுட்டிக்காட்டிய தேரோ இப்போது பதவியின்மீது அவர் கொண்டுள்ள மோகம் தமிழருக்காக இவ்வாறு முதலைக் கண்ணீர் வடிக்கும் நிலைக்கு அவரைக்கொண்டு வந்திருக்கிறது என்றும் சொன்னார்.

பெற்றோல் நிலைய கொள்ளை

யாழ். தபால் நிலையத்துக்கு அருகிலுள்ள எரிபொருள் விற்பனை நிலையத்தில் நேற்று முன்தினம் அதிகாலை, அதன் கதவுகளை உடைத்து அங்கிருந்த எண்ணூற்றி அறுபது ரூபா பெறுமதியான ஓயில் கைகள் இனம் தெரியாதவர்களால் கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ளன. இந்த பெற்றோல் நிலையம் யாழ். மாநகர பல நோ. கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமானது.

இந்திராவுக்கு மற்றுமொருவிருது

மிக உன்னத அரசியல் மேதைக்கான விருதாக வழங்கப்படும் டாக்டர் பி.சி.ராய் விருது மறைந்த பாரதப் பிரதமர் இந்திராவுக்கு மரணத்துக்குப்பின வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் - இந்து . . .

—1ம் பக்கத் தொடர்

முத்துலிங்கம் அருளானந்தம் (ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை) ஆகிய இருவரும் இன்று விடுதலை செய்யப்படவுள்ளனர்.

நாளை விசேஷ பஸ் மூலம் யாழ்ப்பாணம் கொண்டுவரப்படுபவர்களில் இவர்களும் அடங்குவரென அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி - தொண்டா

— 1-ம் பக்கத் தொடர்

படுவது, தேசிய பாதுகாப்பு நிதிக்கு அவர்களின் சம்பளப் பணத்தை வெட்டுவது உட்பட ஆறு விடயங்கள் பற்றி இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா தாராள உதவி

பாகிஸ்தானுக்கென அமெரிக்கா அறுபத்தைந்தரைக் கோடி டாலரை உதவியாக வழங்கவுள்ளது. இதில் ஏறத்தாழ ஐம்பத்தைந்தரைக் கோடி டாலர்கள் அமெரிக்க ஆயுதங்களை வாங்குவதற்காகவும் பந்தோபஸ்து செலவுகளுக்காகவும் பயன் படுத்தப்படவுள்ளது.

இதேவேளை இந்தியாவுக்கென சுமார் 18 கோடி டாலரையும் பங்களாதேசுக்கென 17 கோடி டாலரையும் அமெரிக்கா வழங்கவுள்ளது. அமெரிக்காவிடமிருந்து அதிக உதவிபெறும் ஆசிய நாடாக பாகிஸ்தான் விளங்குகிறதென்பது குறிப்பிடத்தக்கது.

31-ம் நாள் திருப்பலி

வங்காலை பங்குத்தந்தை வண. பிதா. மேரி பஸ்ரியன் அடிகள் மறைந்த முப்பத்தோராவது தினமான நேற்று யாழ், மன்னார் மேற்றிராசனத் தேவாலயங்களில் அவரது நினைவாக திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன. வங்காலையில் அஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது.

மேலும இருவர் கட்டாய லீவில்

இந்தியாவில் அண்மையில் நடைபெற்ற உளவு பார்த்தல் சம்பந்தமாக மேலும இரு சிரேஷ்ட உயர் அதிகாரிகள் கட்டாய லீவில் அனுப்பப்பட்டனர். நிதியமைச்சின் மேலதிக செயலாளர் திரு. பைஜால், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எம். சி. சலீம் ஆகியோரே இந்த அதிகாரிகளாவர். திரு. பைஜால் வெளிநாட்டுக் கடனுதவிகள் நன்கொடைகள் பெறுவதற்கு பொறுப்பாளராவார். திரு. சலீம் இந்தியாவுக்கு ரஷ்யாவிடமிருந்து யுத்த உபகரணங்கள், யுத்தக் கப்பல்கள், யுத்த விமானங்கள் வாங்குவதற்குப் பொறுப்பாளராவார்.

உ

தாயே துணை

திருமண நன்றி நவிலல்

ஞாயிற்றுக்கிழமை (03-02-1985) தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான திருக்கலியாண மண்டபத்தில் நிறைவேறிய,

மணமக்கள்:- மனோகரன் - மல்லிகா

திருமண வைபவத்தில் நேரில் வருகை தந்தும், வாழ்த்துக்கள் அனுப்பியும், அன்பளிப்புகள் வழங்கியும், தற்போதுள்ள சூழ்நிலைகளையும் பொருட்படுத்தாது அன்புள்ளங் கொண்டு, வாகன வசதிகள் செய்து தந்தவர்களுக்கும், மணமக்களை ஆசீர்வதித்த அன்பர்கள், நண்பர்கள், உறவினர்களுக்கும் ஆசியுரை வழங்கிய துர்க்கா துரந்தரி செலவிலிங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கும், எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்

ம. இ. நடராசாவும்
பாரியாரும்
''கல்வாரி''
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

ஆ. சிவராஜா
(சகோதரன்)
''மல்லிகா பதி''
மார்க்கட் கிழக்கு
ஒழுங்கை
மானிப்பாய்.

ஈழமுரசு சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால், 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 6-2-85 புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.